# 2.7 இந்தப் பரிபூரண வாழ்வு

**வேத வசனம்:** **அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். யோவான் 1:12**

**அறிக்கை:** **தேவன் வந்ததால் நமக்கு நிறை வாழ்வு உண்டு**

**சத்தியம்:** திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும் அந்த ஜீவன் பரிபூரணப்படவும் வந்தேன் என்று இயேசு சொல்கிறார்.

## பாடக்குறிப்புகள்

- **தேவன் ஆசீர்வதிக்கிற வாழ்க்கை** - *எபி. 11:8-12*
- **பிசாசு ஒரு திருடன்** - *யோவான் 10:10*
- **மெய் மற்றும் போலி திருப்தி** - *யோவான் 16:22*
- **தூய ஆவியால் நடத்தப்படுதல்.** *ரோமர் 8:14-16*

## ஆர்வமூட்டும் வினாக்கள்

**(ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகளை விவாதிக்கலாம்)**

- *பரிபூரண வாழ்வை நாம் எப்படி பெற முடியும்?*
- *பரிபூரண வாழ்வு என்பது எதைப் போலத் தோன்றுகிறது?*
- *நமது ஆத்துமாவின் சத்துருக்கள் நம்மைக் கொள்ளை கொண்டுபோவது எப்படி வெளிப்படுகிறது? (2 கொரி. 2:11)*

## நிறைந்து வழியும் பரிபூரணம்:

*வங்கியில் பணி செய்யும் ஒருவர் உண்மையான மற்றும் போலியான பணத்திற்குரிய வேறுபாட்டைக் கண்டுபிடிக்க பயிற்சியளிக்கப்பட்டவராக இருக்க வேண்டும். அது போலவே ஒவ்வொரு விசுவாசியும் தேவனிடமிருந்து வருவது எது, நம் ஆத்துமாவின் எதிரிகளிடமிருந்து வருவது எது என்பதை வேறுபடுத்த அறிந்தவராக இருக்க வேண்டும். அதற்கு பரிசுத்த ஆவியானவர் உதவி செய்கிறார். எவர்கள் தேவனுடைய ஆவியால் நடத்தப்படுகிறார்களோ அவர்கள் தேவனுடைய பிள்ளைகள் ஆவர். நம்முடைய பாத்திரம் நிறைவாய் பொங்கி வழிய வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். (சங் 23:5) தேவன் உன்னை எப்படி ஆசீர்வதிக்கிறார்? வலதுபுறத்திலுள்ள படத்தில் தேவன் ஏற்கனவே உனக்குக் கொடுத்திருக்கிற ஆசீர்வாதத்தை எழுது.*



**வேதப்பகுதி**

*ஆதியாகமம் 15: 1-6*

## செயல்

**யாராவது ஒருவருக்கு ஆசீர்வாதமாக இரு. யாராவது ஒருவருக்குக் குறிப்பிட்ட உதவி செய்வதற்கான வழியை இன்று கண்டுபிடி**

## சிந்திக்க:

*பணம் மற்றும் உலகப்பிரகாரமானப் பொருட்கள் இல்லாமல் பரிபூரண வாழ்வு உனக்குக் கிடைக்குமா?*

______________________________

______________________________

## ஜெபம்:

*தேவன் உனக்கு ஆயத்தப்படுத்தி வைத்திருக்கிற பரிபூரண வாழ்வைப் பெற உன் இருதயத்தைத் திறக்கும்படி ஒரு ஜெபத்தை எழுது.*

______________________________

______________________________